# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2105/21 - 2019 ජනවාරි මස 09 වැනි බදාදා - 2019.01.09

*2105/21 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட (திருத்தப்பட்ட) திட்டமிடல் மற்றும் கட்டிட ஒழுங்குவிதிகள் 2008 - 2020 ஆம் ஆண்டின் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைப் பகுதியின் அபிவிருத்தித் திட்டத்தின் அங்கீகாரம் தொடர்பான அறிவித்தல்**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபைப் பிரதேசத்துக்கான திட்டமிடல் மற்றும் கட்டிட நிர்மாண ஒழுங்குவிதிகள் 2008 - 2020 ஆம் ஆண்டிற்கு சேர்க்கப்பட வேண்டிய முன்மொழியப்பட்ட திருத்த மீளாய்வு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது என 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(ஊ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனால் மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(எ) ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8ஏ ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனால் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபைப் பிரதேசத்துக்கான திட்டமிடல் மற்றும் கட்டிட நிர்மாண ஒழுங்குவிதிகளின் 37(1) ஆம் பிரிவுக்கு ஏற்புடைய திருத்தங்களை இத்தால் நான் அங்கீகரிக்கின்றேன்.

*2008 - 2020 ஆம் ஆண்டின் ஸ்ரீ ஜய வர்தனபுர கோட்டே நகர அபிவிருத்தித் திட்டத்தின் கட்டிட மற்றும் நிர்மாண ஒழுங்குவிதி பிரிவு 37.1 இன் திருத்தம்.*

1. ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபைப் பிரதேசத்துக்கான திட்டமிடல் மற்றும் கட்டிட நிர்மாண ஒழுங்குவிதிகளின் 37(1) ஆம் பிரிவு பின்வருமாறு (ஊ) பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

> "ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபைப் பிரதேசத்துக்கான திட்டமிடல் மற்றும் கட்டிட நிர்மாண ஒழுங்குவிதிகளின் அட்டவணை 6 - படிவம் C இல் உள்ள வழிகாட்டல்களின் கீழ் தரப்பட்ட பாதையின் அகலத்தின் அடிப்படையில் தரப்பட்ட அபிவிருத்தி ஒன்றுக்கான மாடிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது என்பதோடு அதில் தொடர்புறுகின்ற அணுகு வழி ஆகக் குறைந்தது 12 மீற்றர்கள் (40 அடி) அகலத்தைக் கொண்டிருக்க வேண்டும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாற்றுப் பாதைகளையும் மற்றும் தனிப்பட்ட


1A - PG 4348 — 92 (2019/01 )

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*அணுகு வழிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதோடு அவசியமான அங்கீகாரத்தை வழங்குவதற்கான அதிகார சபைக்கு உரித்தளிக்கப்பட்ட அத்தகைய தற்தீர்மானத்துக்கு அமைவாக அத்தகைய ஒவ்வொரு அணுகு வழியும் ஆகக் குறைந்தது 6 மீற்றர்கள் அகலத்தைக் கொண்டிருக்க வேண்டும்.".*

பாட்டலீ சம்பிக்க ரணவக்க,
மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

*2017, யூலை 14.*

**கவனத்தில் கொள்ள வேண்டியது** : இந்த ஒழுங்குவிதிகள் 2017, யூலை மாதம் 14 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

*01-556*